# <u>Sub Court, Eraniel</u>

**E.A.No.3/2023**
**E.P. No.28/2022**
Date: 20.10.2023.

ம.சா.1 - செல்வி. வித்யா

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் கல்லூரியில் படித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் என் பெற்றோரின் பராமரிப்பில் தான் தற்போது இருந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் இன்று நீதிமன்றம் வந்துள்ளது என் அப்பாவிற்கு தெரியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மனுவில் என் அப்பாவும் ஒரு எதிர்மனுதாரர் என்றால் சரிதான். என் அப்பா நீதிமன்ற அழைப்பாணையை பெற்றுக் கொண்டு இந்த வழக்கில் ஆஜராகவில்லை என்றால் சரிதான். வழக்குச் சொத்து என் அப்பாவிற்கு செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி கிடைத்தது என்று நான் என் மனுவில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்வதற்கு நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் வாங்கிய கடன் சம்மந்தமாக அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். வழக்குச் சொத்து 6 செண்ட் அளவு கொண்டது. என் தகப்பனாருக்கு உரிமைப்பட்ட சொத்தை நீதிமன்றம் ஏலம் இடுவதற்கு நான் தடை செய்ய முடியாது என்றால் சரியல்ல. வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் என் தகப்பனார் என்னிடம் கொடுத்து நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் என்றால் சரிதான். நானும் என் தகப்பனாரும் சேர்ந்து கொண்டு நீதிமன்ற தீர்ப்பை நிறைவேற்ற விடாமல் இருப்பதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளோம் என்றால் நானும் என் அக்காவும், என் அப்பாவும் சேர்ந்து இந்த மனுவை போட்டுள்ளோம். எனவே மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.